[1987 ஏப்ரல் 22

என்பது ஒரு கொடூரமான வியாதி. அதற்குத் தனியாக மருந்துவ வசதி, சிகிச்சை வசதி, வைத்திய வசதிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே இதற்கும் அதற்கும் தொடர்பு இல்லை.

தமிழகத்தில் மீன்பிடித் தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்தல்.

443—(*வினா எண். 5412) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்மிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதிகளில் ஏற்கனவே மீன்துறையின் கட்டுப்பாட்டில் ஆறு மீனவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் புதிதாக மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏதும் அமைக்க உத்தேசம் தற்போதில்லை.

(முற்பகல் 10-10)

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிற விவரத்தைச் சொன்னார்கள். அவை எந்த, எந்த இடங்கள் அதிலே ஒவ்வொன் றிலும் எவ்வளவு பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், குளச்சல், தூத்துக்குடி ஆகிய 6 இடங்களிலே இப்பொழுது இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு இடத்திலும் 50, 50—மண்டபத்தில் மட்டும் 60-ஆக இருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பயிற்சி பெற்று முடிந்த பிறகு அவர்களுக்கு அரசின் சார்பாக சொந்தமாக மீன்பிடிக்க ஏதாவது உதவிகள் வழங்கப்படுகின்றனவா? அப்படியானால் என்ன உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்

1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பயிற்சி முடிந்ததற்குப் பிறகு உதவிகள் இல்லை. பயிற்சியில் இருக்கும்போதுதான் உதவிகள் வழங்குகிறோம். பயிற்சி முடிந்ததற்குப் பிறகு அரசுக்குத் தேவைப்பட்டால் நியமித்துக் கொள்கிறோம். இல்லையேல் தனியார்களிடத்தில் அவர்கள் வேலை செய்கிறார்கள்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே உள்ள குளச்சலில் இருக்கக்கூடிய பயிற்சிப் பள்ளியில் குறைவான மாணவர்களே பயிற்சி பெறுகின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதிகமான மாணவர்கள் பயிற்சி பெறுகின்ற அளவுக்கு அதை விஸ்தரிக்கின்ற நிலைமையை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று நான் இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குளச்சலில் இருக்கிற அந்தப் பயிற்சிப் பள்ளியில் 50 மாணவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், 1985 ஆம் ஆண்டு 32 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். 1986-ல் 43 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை 50 ஆகக் கொண்டுவருவதற்கு முயற்சிப்பார்களானால் அதை விரிவுபடுத்துவதற்கு மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சிப் பள்ளியில் படித்துவிட்டு வெளியே வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அதே நேரத்தில் தனியாக அவர்கள் மீன் பிடிப்பதற்குக் கட்டுமரங்கள், போட்டுகள் வாங்க வேண்டுமென்று சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடன்கள் வேண்டுமென்று கேட்டாலும் கிடைப்பதில்லை. வேலைவாய்ப்பும் அரசாங்கத்தில் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே, படித்து முடித்தவர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு போட்டுகள் வாங்குவதற்கு மானியங்கள், கடன்கள் போன்றவற்றை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு இல்லை என்று நான் சொல்லவில்லை. அரசாங்கத்தில் இப்பொழுது வேலை வாய்ப்பு இருக்கிற இடங்களில் நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். வேலை வாய்ப்பு இல்லையென்ற காரணத்திற்காக தனியார்களிடத்திலே வேலை வாய்ப்பு பெறுகிறார்கள், சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்; வேலையற்றவர்கள் என்று எந்தப் பட்டியலும் எங்களிடத்திலே இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே மீனவ மாணவர்கள் மட்டும்தான் சேர்க்கப் படுகிறார்களா? மீனவர் அல்லாத மாணவர்களும் சேர்க்கப்படு கிறார்களா? சில இடங்களிலே மீனவ மாணவர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லையென்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, மீனவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பயிற்சிப் பள்ளி களிலே பயின்ற மீனவர்களுக்கு அரசு மூலம் மீன் படகு அல்லது இயந்திரப் படகு அல்லது மீன் துறையில் வழங்கப்படுகிற கருவிகள் வழங்கப்படுவதிலே முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, பயிற்சி நிலையம் பற்றிய கேள்வி இது. மற்ற விவரங்கள் பற்றி தனியாகக் கேட்டால் தனியாகப் பதில் சொல்ல முடியும்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 இடங்களிலே பயிற்சிப் பள்ளிகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், பெரியவளையல், எரியூர் போன்ற இடங்களில் மீனவர்கள் அதிக மான பேர்கள் வசிப்பதன் காரணமாக, பெரியவளையலில் ஒரு பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 இடங்களிலும் ஒதுக்கப்பட்ட இடங்களே ஒவ்வொரு ஆண்டும் பூர்த்தியாவதே கிடையாது. கடைசியாக, 1986 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால்கூட, சென்னையிலே 50 இடங்கள் ஒதுக்கப்பட்டன, 41 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். கடலூரில் 50 இடங்களில் 35 பேர்கள், நாகப்பட்டினத்தில் 50 இடங்களில் 38 பேர்கள், மண்டபத்தில் 60 இடங்களில் 57 பேர்கள், குளச்சலில் 50 இடங்களில் 49 பேர்கள், தூத்துக்குடியில் 50 இடங்களில் 45 பேர்கள், இப்படிக் குறைவாகத்தான் சேர்ந்திருக்கிறார்கள். எனவே, இருக்கிற இடங்களை நிரப்பாமல் மேற்கொண்டு அதிகமாக்குவதிலே அர்த்தமே இல்லை. இருக்கிற இடங்களை நிரப்பியதற்குப் பிறகு அரசு மேற்கொண்டு பரிசீலிக்கும்.

கொடைக்கானலில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

444—(*வினா எண். 9544) **டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப் பகுதியில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன?

(ஆ) அவை எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கொடைக்கானல் மலைப்பகுதிகளில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது.

(ஆ) அது மன்னவனூரில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, கொடைக்கானல் மேல்மலைப்பகுதி, கீழ்மலைப்பகுதி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. மேல்மலைப் பகுதியில் பூண்டி, மன்னவனூர், கவுஞ்சி, போளூர் போன்ற 14 கிராமங்கள் வருகின்றன. அதில் மன்னவனூரில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது போதுமானதாக இல்லாததால் நடைபாதை இல்லாத இடங்களிலிருந்து மக்கள் டோலிகளைக் கட்டிக்